புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# காலந்தோறும் பெருந்திணை

முனைவர் கி. அய்யப்பன்
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,
உ. நா. அரசினர் கல்லூரி,
பொன்னேரி- 601204

ஆய்வுச் சுருக்கம்

சங்க அக இலக்கியங்களில் கலித்தொகையில் மட்டுமே பெருந் திணையைச் சார்ந்த பதினான்கு பாடல்கள் உள்ளன. புறத்திணையில் பெருந்திணை என்பது, தலைவன் தலைவி பெயர் சுட்டப்பட்டதால் அகத்தில் இருக்க வேண்டிய பெருந்திணைப் பாடல் புறப்பாடல் ஆகிறது. புறநானூற்றில் 143 முதல் 147 வரையுள்ள ஐந்து பாடல்கள் பெருந்திணையில் அமைந்துள்ளன. காம இன்பம் துய்க்கும் பாடல்கள் அகத்திணைப் பாடல்கள். மாறாகத் தலைவன் தலைவியர் துன்பப்படும் பாடல்களை புறப்பொருள் வெண்பாமாலை பெருந்திணை எனக் கொள்கிறது. கைக்கிளைத் திணை பற்றியும் பெருந்திணை பற்றியும் புலவர்கள் பாடல் மிகுதியாகப் பாடவில்லை. ‘கைக்கிளை என்பது ஒரு தலைக்காமம், பெருந்திணை என்பது பொருத்தக்காமம்’’ எனக்கூறி அதனைப் பாடாமல் புறந்தள்ளிய புலவர்கள் ‘பொருந்தாக்காமமாவது, முதியவன் இளம் பெண்ணை மணப்பதும், முதியவள் இளைஞனை மணப்பதும் என அதற்கு விளக்கமும் கூறினர். இத்தகைய நிகழ்வுகள் அக்காலத்தில் தமிழகத்தில் மக்களிடையே வழக்கத்தில் இருந்துள்ளன என்பதையே மேற்குறித்த விளக்கம் புலப்படுத்துகிறது. முதியவன் இளம் பெண்ணுடனும் முதியவள் இளைஞனுடனும் இணைவதாகிய நிகழ்வுகள் குழுமணம் நிலவிய சமூக அமைப்பில் இயல்பானவையே ஆகும்.

## முன்னுரை

தமிழரின் தொன்மைமிக்க வாழ்வியலைப் பழைய இலக்கியங்கள் வழியே அறிந்துகொள்கிறோம். வாழ்க்கை முறையினை உணர்த்த தொல்காப்பியம் அக வாழ்க்கை மற்றும் புறவாழ்க்கை என இரண்டாகப் பகுத்துள்ளது. அதில் ‘அகம்’ காதல் சார்ந்த வாழ்க்கையினையும், ‘புறம்’ நாடு சார்ந்த போர், வீரம் முதலிய வாழ்வியல் சூழலையும் எடுத்துரைத்துள்ளது. தொல்காப்பியம் எழுதிய தொல்காப்பியர் திணையை ஒழுக்கம் என்னும் பொருளில் கையாண்டு அக ஒழுக்கம் ஏழினையும், புறஒழுக்கம் ஏழினையும் பிரித்தறிகின்றார். சங்க இலக்கியத்தில் அக இலக்கியமான கலித்தொகையில் மட்டும் பதினான்கு பெருந்திணைப் பாடல்களும், புற இலக்கியமான புறநானூற்றில் ஐந்து பெருந்திணைப் பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

தமிழ் அக இலக்கண மரபில் பெருந்திணையை வளர்த்தெடுத்து இருக்கிறார்கள். அகன் ஐந்திணையில் தொல்காப்பிய கால வளர்ச்சி நிலை அப்படியே இருக்க, கைக்கிளையும் பெருந்திணையும் பின்வந்த இலக்கண ஆசிரியர்களால் வளர்த்தெடுக்கப்பெற்றுள்ளன. இவ்வளர்ச்சி ஆண், பெண் இருவர் பக்கத்திலும் ஒத்த அன்பினைக் கொள்ளாத கைக்கிளையும், பெருந்திணையும் புறப்பொருள் திணைகளாகவும் கொள்ளத்தக்க அளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளன. இவ்வாறு அக, புற ஒழுக்கத்தில் வரும் பெருந்திணையைப்பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## பெருந்திணை- விளக்கம்

*பெருந்திணை என்பது "ஒவ்வாக் காதலொழுக்கம்"(ப.521) என்று செந்தமிழ் அகராதி கூறுகிறது. பெருந்திணை பற்றி ஆராய்ச்சி மேற்கொண்ட வ. சுப. மாணிக்கனார் பெருந்திணையில் எவ்வகையாலும் வலிந்த காமத்திற்கு இடனில்லை என்று கூறுவார். மிகு காமத்தைப் பழந்தமிழர் பாடியதாகக்கொள்ள வைத்தோர் நச்சினார்க்கினியர், ஐயனாரிதனார், நாற்கவிராசநம்பி ஆகியோர். ஐயனாரிதனார் பெண்பாற் பெருந்திணை என்ற ஒன்றை அமைத்தார்.*

*பெருந்திணை பற்றிய பிற்கால வாசிப்பில் நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. உரையாசிரியர், இலக்கண ஆசிரியர் எனப் பலரும் பல்வேறு நோக்கில் வாசித்து முடிவுகொண்டுள்ளனர்.*

*பெருந்திணைக்கு இந்நாள்வரை உரையாசிரியர்களும், பிற்கால இலக்கண ஆசிரியர்களும் பின்வரும் பொருள்களைக் கூறியுள்ளார்கள்.*

*"1. பெருந்திணை என்பது பொருந்தாக்காமம்.*

*2. ஒருவன் ஒருத்தியிடம் கழிகாமம் கொள்ளுதல்;அவளை அடையப்பெறாது மடலேறுதல்.*

*3. தனக்கு இளைய பருவத்தாளைக் கூடுதல் நெறியாகும்; அவ்வாறின்றி ஒப்பும் மூப்பும் உடைய பருவத்தாளைக் கூடி நுகர்தல்.*

*4. தலைவியின் இளமைக்கு ஒவ்வாது ஆடவன் மிக முதிர்ந்திருத்தல்.*

*5. இளமைதீர்ந்து முதிர்ந்த வயதில் துறவு கொள்ளுதல் நெறி; அவ்வாறின்றி இருவரும் காமநுகர்தல்.*

*6. தேறுதல் அடையாது அறிவழிக்கும் கழிகாமம் கொள்ளுதல்.*

*7. கரைகடந்த காமத்தால் விரும்பாதவரை வலிதிற் புணர்தல்."(ப. 178)*

*என்று வ. சுப. மாணிக்கனார் தமிழ்க்காதல் என்னும் நூலில் பதிவுசெய்கிறார்.*

*கைக்கிளைத் திணை பற்றியும் பெருந்திணை பற்றியும் புலவர்கள் பாடல் மிகுதியாகப் பாடவில்லை. 'கைக்கிளை என்பது ஒரு தலைக்காமம், பெருந்திணை என்பது பொருத்தக்காமம்" எனக்கூறி அதனைப் பாடாமல் புறந்தள்ளிய புலவர்கள் 'பொருந்தாக்காமமாவது, முதியவன் இளம் பெண்ணை மணப்பதும், முதியவள் இளைஞனை மணப்பதும் என அதற்கு விளக்கமும் கூறினர். இத்தகைய நிகழ்வுகள் அக்காலத்தில் தமிழகத்தில் மக்களிடையே வழக்கத்தில் இருந்துள்ளன என்பதையே மேற்குறித்த விளக்கம் புலப்படுத்துகிறது. முதியவன் இளம் பெண்ணுடனும் முதியவள் இளைஞனுடனும் இணைவதாகிய நிகழ்வுகள் குழுமணம் நிலவிய சமூக அமைப்பில் இயல்பானவையே ஆகும். ஏனெனில் ஒரு கணத்தின் ஆண்களும் பிற கணங்களின் பெண்களும் பிறவி கணவன் மனைவியர் ஆவர் என்பது பழங்குடி மக்களின் வாழ்வியல் பற்றி ஆராய்ந்த ஆய்வாளர் கூறும் உண்மை ஆகும்.*

*முதியவன் இளம் பெண்ணைக் காதலிப்பதும் மணப்பதும், முதியவள் இளைஞனைக்காதலிப்பதும் மணப்பதும் ஆன இவ்வழக்கம் கீழ்மக்களுக்கு உரியதாகும் என்று கூறி புலவர்கள் பெருந்திணை பற்றிப் பாடாமல் ஒதுக்கினர். எனவே அவர்கள் பெருந்திதிணையைப் பற்றிப் பாடல் எதுவும் பாடவில்லை. அதனால் அவற்றுக்கான இலக்கியச் சான்றுகள் சங்கஇலக்கியங்களில் இல்லை. புலவர்கள் அதனைப் பாடாவிட்டாலும் அத்தகைய வழக்கம் தமிழகத்தில் சங்ககாலத்தில் நடைமுறையில் இருந்தது. இன்றும் இருக்கிறது. இதற்கு எண்ணற்ற நடைமுறை எடுத்துக் காட்டுகளைக் கூறமுடியும்.*

*பெருந்திணையைப் பாடிய புலவர்கள்*

*அக இலக்கியமான கலித்தொகையில் மருதக்கலியில் மருதனிள நாகனார் பாடிய 62, 94 ஆகிய இரண்டு பாடல்களும், முல்லைக்கலியில் சோழன் நல்லுருத்திரன் பாடிய 112, 113 ஆகிய இரண்டு பாடல்களும், நெய்தல் கலியில் நல்லந்துவனார் பாடிய138 முதல் 147வரை உள்ள பத்துப் பாடல்களும் ஆக மொத்தம் 14 பாடல்களும் பெருந்திணைக்கும் உரியன.*

*புற இலக்கியமான புறநானூற்றில் 143ஆவது பாடலைக் கபிலரும், 144, 145ஆவது பாடல்களைப் பரணரும், 146ஆவது பாடலை அரிசில்கிழாரும், 147ஆவது பாடலைப் பெருங்குன்றூர் கிழாரும் பாடியுள்ள இந்தப் பாடல்கள் ஐந்தும் பெருந்திணைக்கு உரியன.*

*குறிஞ்சிக்கலி*

*கலித்தொகையில் 62ஆவது பாடலில். ஒத்த உருவு முதலியவை இல்லாத தலைவன் தலைவி இருவரும் மிக்க காமத்தால் மாறுபட, உரையாடி இருவரும் கூட நினைக்கின்றனர்.*

"தன்னுடன் புணரும் குறிப்பு இல்லாத என்னைப் புணர்ச்சி விருப்புடன் கையால் வலியப் பிடிக்கும் இவன் நாணம் இல்லாதவன்'' என்று தலைவி கூறுகிறாள். "உன் மேனியைத் தழுவுவதற்கு இனிதாய் உள்ளது, அதனால் தழுவினேன்" என்று பதில் தருகிறான் தலைவன். "தனக்கு இனிதாய் இருக்கிறது என்று எண்ணிப் பிறர்க்கு இனியது அல்லாததை வலியச் செய்வது இன்பத்தை அளிக்குமோ?" என்று தலைவி வினா எழுப்புகிறாள். "தண்ணீர் விரும்புவர்க்கு இனியது என்று அருந்துவது அல்லாமல் அந்த நீர்க்கு இனியதாய் இருக்கும் என்று எண்ணி அருந்துவாரோ!" என்று விடை தருகிறான் தலைவன்.

வேட்டார்க்கு இனிதாயின் அல்லது நீர்க்கினிதென்று
உண்பவோ நீருண் பவர் (அடிகள் : 10-11)

காமத் துன்பத்தில் ஆழ்த்தும் பெண்களை வன்மையாகச் சேர்வதும் ஒருவகை மணம் என நூலோர் கூறுகின்றனர் என்றும் கூறுகின்றான். இவைகளைக் கேட்ட தலைவி புணர்ச்சிக்கு உடன்படுகிறாள். இது மிக்க காமத்து மிடல் என்னும் பெருந்திணை ஒழுக்கம்.

நெய்தற்கலி

பெருந்திணையைச் சற்று அதிக அளவில் (பத்துப் பாடல்கள்) பாடியவர் நல்லந்துவனார். மடலேறுதலைக் கூறும் நெய்தல் கலித்தொகைப்பாடல் 141ஐ காண்போம். அப்பாடலில் தலைவன் மடல் ஏறி வருந்துவது கண்ட தலைவியின் உறவினர்கள் தம் குடிக்குப் பழி வரும் என அஞ்சி, பாண்டியனுக்கு அவன் பகைவர் திறை கொடுத்தது போலத் தலைவனுக்குத் தலைவியை அவ்விடத்திலேயே கொடுத்தனர் என்று பதிவுசெய்கிறது.

புற இலக்கியத்தில் பெருந்திணை

தலைவன் தலைவி பெயர் சுட்டப்பட்டதால் அகத்தில் இருக்க வேண்டிய பெருந்திணைப் பாடல் புறப்பாடல் ஆகிறது. இது போன்ற பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன.

புற நானூற்றில் பெருந்திணைப் பாடல்கள்

புறநானூற்றில் 143 முதல் 147 வரையுள்ள ஐந்து பாடல்கள் பெருந்திணையில் அமைந்துள்ளன. வையாவிக் கோப்பெரும் பேகன் தன் மனைவி கண்ணகியைத் துறந்து நல்லூர்ப் பரத்தையிடம் உறவு கொண்டிருந்தான். இதனைக் கண்ட கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் ஆகிய நால்வரும் பேகனிடம் கண்ணகியின் துயரத்தைக் கூறுகின்றனர்; அவளுடன் சேர்ந்து வாழுமாறு வேண்டுகின்றனர்.

''நின்னும் நின் மலையும் பாட இன்னாது
இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலை யகம் நனைப்ப விம்மிக்
குழல் இனை வது போல் அழுதனள் பெரிதே'' (புறநானூறு, 143; 12-15)

எனும் பாடல் வரிகளில் 'பேகனே! உன் ஊருக்கு யான் வந்து உன்னையும் உன் மலையையும் பாடினேன். அப்போது வேதனையுற்று வடித்த கண்ணீரை நிறுத்த முடியாமல், மார்பு நனைய விம்மிக் குழல் அழுவது போல் அழுதாள் ஒருத்தி' எனக் கூறுகிறார் கபிலர். பேகன் பெருங்குன்றூர்கிழாருக்குப் பரிசில் தர முன் வந்தான். ஆனால் புலவரோ அதை மறுக்கிறார்.

புறநானூறு 147ஆவது பாடலில் "நேற்று நான் செவ்வழிப் பண்ணைப் பாடி வந்தேன். ஒருத்தி கண்ணீர் விட்டு வருந்தினாள். அவிழ்ந்த கூந்தலை உடையவள் அவள். அவள் தன் கூந்தலை முடித்து மகிழ நீ அருள வேண்டும். இதுவே நான் வேண்டும் பரிசில்" என்கிறார் புலவர். இப்பாடல்கள் பேகனுக்குப் பரத்தையிடம் தோன்றிய பொருந்தாக் காதலைக் கூறுவதாலும், கண்ணகி பேகனிடம் கொண்ட மிகுந்த காதலையும் கூறுவதால் இப்பாடல்கள் பெருந்திணை ஆகின்றன.

பெருந்திணையின் இலக்கணம்

தொல்காப்பியர் பெருந்திணையின் நான்கு கூறுகளை விளக்குகிறார்.

''ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே'' (தொல்காப்பியம், அகத்திணையியல், நூ. 54)

*என்று பெருந்திணைக்கான இலக்கணத்தை எடுத்துரைக்கிறார். பெருந்திணை என்பது புணர்ந்தபின் நிகழத்தக்கது என்கிறார் இளம்பூரணர். ஏறிய மடல் திறம் என்பது தலைமகனுக்கே உரிய நிலைப்பாடு என்றும், இளமை தீர்திறம் என்பது தலைமகன் முதியனாகித் தலைமகள் இளையளாதலும், தலைமகள் முதியளாகித் தலைமகன் இளையளாதலும், இவ்விருவரும் இளமைப் பருவம் நீங்கியவழி அறத்தின் மேல் மனம் நிகழ்தலன்றி காமத்தின்மேல் மணம் நிகழ்தலும் என மூன்று வகைப்பட்டது என்றும், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் என்பது தெளிவு ஒழிந்த காமத்தின் கண்ணே மிகுதல் என்றும், மிக்க காமத்து: மிடலொடு தொகைஇ என்பது பின்வரும் நிலைகளை உடையதாகவும் கொள்ளப்பெறுகின்றது.*

*ஏறிய மடல் திறம், இளமை தீர்ந்த திறம், தெளிவு அற்ற மிகுந்த காமம், காமம் மிகுந்து விடுதலால் செய்யும் வரம்பு கடந்த செயல்கள் ஆகிய நான்கும் பெருந்திணையைக் குறிப்பன என்பது இந்நூற்பாவின் கருத்து. இனி இவற்றைத் தனித்தனியே விளக்கிக் காணலாம்.*

*ஏறிய மடல் திறம்*

*இது மடல் ஏறுவதைக் குறிக்கும். மடலேறுதல் ஆணுக்கு மட்டுமே உரியது. தலைவன் மடல் ஏறுவேன் எனக் கூறுவது சொல் அளவில் கைக்கிளையளவில் நிற்கும். உண்மையில் தலைவன் மடல் ஏறிவிடுவது பெருந்திணையாகி விடும்.*

*தான் விரும்பும் தலைவியை மணக்க இயலாத நிலை ஏற்படும்போது தலைவன் மடல் ஏறுகிறான். அதைக்கண்ட தலைவி இரங்கி அவனுக்கு உடன்படுகிறாள். அவ்வாறு அவளை அடைந்த விதத்தைத் தலைவன் தன்னைச் சேர்ந்தோருக்குத் தெரிவிக்கின்றான். கலித்தொகையின்138 ஆவது பாடலில் தலைவன் தலைவியை அடைகிறான். எனினும் அடைந்த விதம் (மடலேறுதல்) அன்பின் ஐந்திணைக்குப் பொருந்துவதாக இல்லை. நாணமற்ற ஒரு செயலால் களவைப் பலர் அறிய வெளிப்படுத்தி விட்டமையால் இது பெருந்திணை ஆயிற்று. தலைவன் பூளைப்பூ, ஆவிரம்பூ, எருக்கம் பூ ஆகியவற்றைத் தொடுத்து மடல் குதிரையில் கட்டி, ஊர்க்கடைத் தெருவில் மடல் ஏறி,*

*"எல்லீரும் கேட்டீமின் என்று*
*படரும், பனைஈன்ற மாவும் சுடர்இழை*
*நல்கியாள் நல்கி யவை" (கலித்தொகை, 138: 11-13)*

*என வரும் பாடல் அடிகளில், "விளங்கும் அணியை உடைய என்னால் விரும்பப்பட்டவள் எனக்குக் காதலித்துத் தந்தவை வருத்தமும், வருத்தத்தால் உண்டான பனை மடலால் செய்த குதிரையும் ஆகும்" என்பது பொருள். ஒளி பொருந்திய அணியை உடையவள் என்னால் பொறுத்துக் கொள்ள இயலாதபடி காம நோயை எனக்குத் தந்தாள். அந்நோயால் என் உயிர் அழுந்தியது. நெருப்பில் பட்ட மெழுகாய் உருகித் தேய்கிறது. இஃது எல்லாரும் இரக்கப்படுமாறு இருப்பது என்றும் இப்பாடலைக் கேட்டு அவள் இரங்கித் தன்னை ஏற்றதாகவும் கூறுகிறான்.*

*இளமைதீர் திறம்*

*பெருந்திணையின் இரண்டாவது வகையாகக் குறிப்பிடப்படுவது இளமை தீர் திறம் ஆகும். இக்காதல் இளமை நீங்கிய நிலையில் கொள்ளுவது. இது மூன்று வகையில் அமையலாம். தலைவி முதியவளாகத் தலைவன் இளையவனாக இருக்கலாம்; தலைவன் முதியவனாகத் தலைவி இளையவளாக இருக்கலாம்; இருவருமே இளமை தீர்ந்தவர்களாகவும் இருக்கலாம். ஒரு குறளனும் (குள்ளன்) கூனியும் முதலில் ஊடிப் பேசிப் பின் கூடுகின்றனர். ஒருவரையொருவர் உருவத்தைக் கொண்டு இகழ்ந்து பேசுகின்றனர்.*

*"நீருள் நிழல்போல் நுடங்கிய மென்சாயல்*
*ஈங்குஉருச் சுருங்கி*
*இயலுவாய் ! நின்னொடு உசாவுவேன்" (கலித்தொகை, 94; 2-4)*

*'கரையில் நின்ற ஒரு பொருளின் நிழல் நீருக்குள் தெரிவது போல் கூன் கொண்டு உருவம் சுருங்கி நடப்பவளே! உன்னோடு நான் பேச வேண்டும்' என்று இப்பாடலில் கூனியைப் பார்த்துக் குறளன் கூறுகிறான். அதற்கு அவள்,*

*"காண்தகை இல்லாக் குறள்நாழிப் போழ்தினான்*
*ஆண்டலைக்கு ஈன்ற பறழ்மகனே ! நீ எம்மை*
*வேண்டுவல் என்று விலக்கினை ; நின்போல்வார்*

*தீண்டப் பெறுபவோ மற்று?" (கலித்தொகை, 94; 5-8)*

*"கண்ணால் பார்க்கச் சகிக்க முடியாத குள்ளனாகப் பிறப்பதற்குரிய நேரத்தில், ஆந்தைப் பறவைக்கு அதன் பெட்டை ஈன்ற குஞ்சான மகனே! நீ என்னை விரும்புவேன் என்று மேலே போகாமல் தடுத்தாய். உன்னைப் போன்று குறளனாக இருப்பவர் என்னைத் தீண்டப் பெறுவாரோ?" என்று பதில் தருகிறாள். தொடர்ந்து இருவரும் மாறிமாறி இவ்வாறு விளையாட்டாய்ப் பேசிக் கொண்டபின் காம ஒழுக்கம் மேற்கொள்கின்றனர். 'உருச் சுருங்கி இயலுவாய்' என்றும் 'கொக்குரித்தாற் போலத் தோன்று பவளே' என்றும் சொல்வதனால் தலைவி உருவம் சுருங்கியமையும், உடலில் தோல் சுருங்கியமையும் உணர்த்தப்படுகின்றன. இதனால் தலைவியின் இளமை தீர்ந்த முதுமை சுட்டப்படுகின்றது. எனவே "இளமை நீங்கப் பெற்றவர் முதியவர் காதல் ஆதலால் பெருந்திணை ஆயிற்று." (ப.565) என்று மாணிக்கனார் கூறுகிறார்.*

*'ஆண்டலைக்கு ஈன்ற பறழ் மகனே' என்பதால் தலைவனின் இளமை தீர்ந்த திறம் சுட்டப்படுகின்றது. உருவப் பொருத்தமின்மை, பருவப் பொருத்த மின்மை ஆகிய இரண்டுமே இக்காதலைப் பெருந்திணைக் காதலாக அடையாளம் காட்டுகின்றன. வேறு குறைபாடுகள் இன்றித் தலைவனும் தலைவியும் வயது முதிர்ந்தபின் காமம் கொள்வதற்கு ஒரு காரணம், இளமையில் பொருள் தேடுதல் போன்றவற்றால் போதுமான காம நுகர்ச்சி இல்லாமல் போவதே ஆகும். அதனையும் பெருந்திணை என்றே கொள்வர்.*

*தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்*

*அறிவுத் தெளிவு அற்றுக் காமத்தில் மிகுதல், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் ஆகும். இது பெரும்பான்மை தலைவிக்கு உரியது. தலைவன் பிரிந்திருக்கும் காலத்தில் வருந்தியிருக்கும் தலைவியைத் தோழி தேற்றுவாள். ஆனால் தேறுதல் பெறாத தலைவி, காமம் மிகுந்திடப் பிறர் கேட்பத் தன் காமத்தையும் அதனால் தான்படும் துன்பத்தையும் எடுத்துரைப்பாள்.*

*கலித்தொகையின் 142ஆவது பாடல் இதற்குத் தகுந்த சான்றாகும்.*

*"பெண்ணின்றி*

*யாவரும் தண்குரல் கேட்ப.. எழில்உண்கண் ஆயிதழ் மல்க அழும்" (142; 8-12)*

*எனும் பாடல் வரிகளில் பெண்தன்மை இல்லாமல், பிறர்க்குக் கேட்காமல் சொல்ல வேண்டிய காதல் வேதனை பற்றிய செய்தியை எல்லாருக்கும் கேட்கும்படி கூறி அழுகின்றாள்' எனத் தோழியர் பேசுகின்றனர். 'ஞாயிறே! அவரைத் தேடிப் பார்த்து எனக்குத் தா. அப்போதுதான் உயிர் திரியாக, என் நெஞ்சமே அகலாக எரிகின்ற என் காமத்தீ அவியும்' எனத் தன் காம வெப்பத்தை வெளிப்படையாகப் பேசுகிறாள். தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் என்பது "ஆற்ற முடியாத காமத்தின் மிகுதியைப் பற்றிப் பேசுவது. அறிவு, பண்பு நலன் ஆகியவற்றை அழித்து அடக்க இயலாத காம வெளிப்பாடு இதன் இயல்பாகும்"(ப.147) என்று சிலம்பு நா. செல்வராசு கூறுகிறார். தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் என்பதை மணமுறையாக சான்றோர் ஏற்றுக்கொள்ளவில்லை. என்றாலும், காமமிகுதியால் மணம்புரிந்து கொள்வது என்ற ஒரு துறை இருந்துள்ளது என்பதை தெரிந்துகொள்ள முடிகிறது.*

*மிக்க காமத்து மிடல்*

*காமம் மிகுந்துவிடுதலால் செய்யும் முறை கடந்த செயல்களைக் குறிப்பது இது. பிரிந்து செல்ல வேண்டிய தலைவன், பிரிய வேண்டாம் எனத் தலைவியோ தோழியோ வற்புறுத்தாத நிலையிலும், காம மிகுதியால் தன் பயணத்தை நிறுத்திவிடுதல், தலைவியிடம் பணிந்து நின்று வேண்டுதல், மணவாழ்வில் மனைவி விடுத்தலால் வேறு பெண்டிரை நாடிச் செல்லுதல் போன்றவை ஆணின் 'மிக்க காமத்து மிடல்' ஆகும். "யார் இவன் என்னை விலக்குவான்?" எனத் தொடங்கும் கலித்தொகை 112 ஆவது பாடலில், "நின் பெற்றோர் சொல்லாடாது நிற்க எனக் கூறினரே அன்றிச் சேர வேண்டாமெனக் கூறினரோ?" என்று தலைவன் தலைவியிடம் கேட்கிறான். அவளும் சேர உடன்படுகிறாள். இவ்வாறு மிக்க காமத்தால் அவளைக் கூடுவதால் இது பெருந்திணை ஆயிற்று. தலைவன் வருவதாகக் கூறிய பருவம் வந்தபோது 'இது அப்பருவம் தான் என்றும், அப்பருவம் அன்று' என்றும் தலைவி மயங்குதல் போன்றவை பெண்ணின் 'மிக்க காமத்து மிடல்' ஆகும்.*

*சங்க அக இலக்கியங்களில் கலித்தொகையில் மட்டுமே பெருந் திணையைச் சார்ந்த பதினான்கு பாடல்கள் உள்ளன. பிற அக இலக்கியங்களில் பெருந்திணைப் பாடல்களைக் காண இயல வில்லை.*

*நம்பியகப்பொருள் சுட்டும் பெருந்திணை இலக்கணம்*

*பெருந்திணை என்பது பொருந்தாக் காமம் என்றும், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் என்றும் தொல்காப்பியர் சொன்ன பெருந்திணையின் ஒருவகையை, ஒட்டு மொத்த பெருந்திணையாக நம்பியகப்பொருள் ஆக்கியுள்ளது. பெருந்திணையை நம்பியகப்பொருள் இருநிலைகளில் பகுத்துக்காண்கிறது. அவை அகப்பொருள் பெருந்திணை, அகப்புறப் பெருந்திணை என்பனவாகும்.*

*அகப்பொருள் பெருந்திணை*

*நம்பியகப் பொருளின் "அகன்றுழி கலங்கலும், புகன்ற மடல் கூற்றும்" எனத் தொடங்கும் 243 ஆவது நூட்பாவானது, அகப்பொருள் பெருந்திணைக்கு உரிய துறைகளைக் கூறுகிறது. அவை, பிரிவில் கலங்குதல், இணங்காவிட்டால் மடலேறுவேன் எனல், குறியிடத்தில் பெறமுடியாமல் போதல், நம்பியவரைக் கைவிடுதல், பெண்ணை வெறியாட வைத்தல், ஆணும் பெண்ணும் விரும்பிப் பெற்றோருக்குத் தெரியாமல் ஓடிப்போதல், மாதவிலக்கு பற்றிக் கூறுதல், பொய்யாக உறுதிமொழி கூறுதல், ஊடல்-பிணக்குப் போட்டுக்கொண்டே காலம் கழித்தல், பொருள் தேடச் செல்பவனைப் போக விடாமல் தடுத்தல், போர்ப்பாசறையில் காதலியை நினைத்துப் புலம்பல், சொன்ன பருவத்தில் திரும்பாமை, தலைவன் வற்புறுத்தும்போது எதிர்த்துப் பேசுதல், கணவனும் மனைவியும் காட்டுக்குச் சென்று தவம் செய்தல் போன்றவை அகத்திணையில் நிகழும் பெருந்திணைச் செயல்கள் என்ற நிலையில் அகப்பொருள் பெருந்திணை துறைகளைப் பெற்றுள்ளது. பெருந்திணையில் அகம் சார்ந்த வெளிப்பட அறிய இயலாத தன்மை உடையன அகப்பொருள் பெருந்திணையாகக் கருதப்பெற்றுள்ளன.*

*அகப்புறப் பெருந்திணை*

*நம்பியகப்பொருளில் "மடலேறுதலோடு விடை தாழால்" எனத்தொடங்கும் 244 ஆவது நூற்பா அகப்புறப் பெருந்திணையைக் கூறுகிறது. அவை, மடலேறி வந்து மனைவியாக்கிக் கொள்ளுதல், காளையை அடக்கி மனைவியாக்கிக் கொள்ளுதல், குற்றிசை, குறுங்கலி, சுரநடை, முதுபாலை, தாபத நிலை, தபுதார நிலை, முதலான நிகழ்வுகளில் அகப்புறப் பெருந்திணையின் துறைகள் அமையலாம் என நம்பியகப்பொருள் கூறுகிறது. நம்பியகப்பொருள் பெருந்திணையை அடுத்த கட்ட வளர்ச்சிக்குக் கொண்டு சென்றுள்ளது.*

*புறப்பொருள் வெண்பாமாலை கூறும் பெருந்திணை*

*பெருந்திணையின் அடுத்த கட்ட வளர்ச்சி என்பது புறப்பொருள் வெண்பாமாலையில் தொடருகின்றது. காம இன்பம் துய்க்கும் பாடல்கள் அகத்திணைப் பாடல்கள். மாறாகத் தலைவன் தலைவியர் துன்பப்படும் பாடல்களை இந்த நூல் பெருந்திணை எனக் கொள்கிறது. இங்கு பெண்பால் கூற்றுப்பெருந்திணை, இருபாற்பெருந்திணை என்று பெருந்திணை இருவகைப்படுத்தப்படுகிறது.*

*பெண்பால் கூற்றுப் பெருந்திணை*

*புறப்பொருள் வெண்பாமாலையில் கொளு மற்றும் 305- 324 வரையுள்ள நூற்பாக்கள், பெண்பால் கூற்றுப் பெருந்திணையைக் கூறுகின்றன. அவையாவன, வேல்வீரனிடம் பெண் ஆசைமொழி பேசுவது, தலைவன் ஊர்தியைக் கண்டு தலைவி தொழுதல், தலைவன் பிரிவைத் தாங்கிக்கொள்வது, திருமணத்தை எண்ணிக் காத்திருத்தல், அவன் வரவில்லையே என ஏங்குதல், பெண் ஆணைத் தேடி இரவில் செல்லல், தலைவன் மேல் இல்லாததும் பொல்லாததும் தலைவி சொல்லிச் சிரித்தல், ஊடலின்போது அழுதல், மாலை வந்ததும் வருந்துதல், அவனைத் திருடிய பரத்தையை ஏசுதல், பரத்தையின் குறி தலைவனிடம் கண்டு தலைவி சினக் கண்ணைப் பாய்ச்சுதல், புணர்ச்சிக்குப் பின்னும் அவனை அவள் தழுவிக்கொண்டே கிடத்தல், அவனை அவள் கைப்பிடியாக இழுத்துச் செல்லல், உடலுறவின்போது அவள் சோர்ந்து போதல், ஊடலில் தளர்வு, அவன் பசப்பு வலையில் வீழ்தல், அவனை அவள் தன் காலடியில் விழ வைத்தல், தூங்குபவனைத் தழுவித் தொந்தரவு செய்தல், பரத்தையிடம் செல்லுமாறு தானே அனுப்பி வைத்தல் என்று பெண்பால் கூற்று நிகழ்த்தும் பெருந்திணை இடங்கள் பத்தொன்பது என*

*இந்நூற்பாக்கள் சுட்டுகின்றன. தலைவி காம மிகுதி காரணமாக பேசுதற்குரிய வாய்ப்புகளை இந்நூற்பாக்கள் பெருந்திணைப் படுத்தியுள்ளன.*

*இருபாற் பெருந்திணை*

*புறப்பொருள் வெண்பாமாலையில் கொளு மற்றும் 325-342 வரையுள்ள செய்யுள்கள் இருபாற்பெருந்திணையைப் பற்றி பேசுகின்றன. பொருள் தேடச் செல்லும் தலைவன், அவள்மேல் உள்ள ஆசையால் கைவிடுதல், தலைவன் மடலூர்ந்து சென்று தலைவியை அடையள், அவனிடம் தோழியைத் தூதாக அனுப்பல், தலைவியின் துன்பத்தைத் தோழி அவனுக்குச் சொல்லுதல், அவன் வணங்கக் கண்டு அவனுக்குத் தன்னை விட்டுக்கொடுத்தல், அவர் சொன்ன காலம் இது அன்று எனத் தோழி கூறுதல், தலைவியைப்பற்றி அவன் ஊரறியப் பேசுதல், அவன் உறவு ஊருக்குத் தெரியாது என்று கூறுதல், பெண்ணைப் பேயாட்டுதல், அவனுக்குத் தூதாகப் பாணன் வந்துள்ளதைத் தோழி தலைவியிடம் சொல்லல், அவனை அடைதல் எனக்கு எளிது எனப் பரத்தை கூறல், அவனின் பரத்தமை அறிவேன் எனத் தோழி விறலியிடம் சொல்லி அனுப்புதல், பரத்தமை பற்றி விறலி தோழியிடம் சொல்லள். பரத்தமையை மறைக்கவேண்டிய தோழி தலைவியிடம் 'போட்டுக்கொடுத்தல்', அவனது பரத்தமையை மறைக்கவேண்டிய விறலி தலைவியிடம் கூறல், பரத்தை பகைவர்க்கும் உரியள் என அறப்புகழ் கூறல், பரத்தையின் பசப்பு மொழியைக் குத்திப் பேசித் தலைவனை விலக்குதல் ஆகிய 17 துறைகள் இருபாற் பெருந்திணையாக புறப்பொருள்வெண்பாமாலை அடையாளப்படுத்துவதைக் காணமுடிகிறது. இவ்வகையில் பெருந்திணை இலக்கணம் தொல்காப்பியத்தில் இருந்து பின்வந்த இலக்கண ஆசிரியர்களால் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளன.*

*யாப்பருங்கல விருத்தி கூறும் பெருந்திணை*

*“அறவழியில் அல்லாமல் மறவழியில் இன்பம் துய்ப்பது பெருந்திணை”(ப.570) என்று யாப்பருங்கல விருத்தி கூறுகிறது. இது மேலும், “நிலையில்லாமல் அவ்வப்போது தோன்றி மறையும் காதலாக இருக்கும். இந்தக் காதல் நீடிக்கவும் செய்யாது. இது அகத்திணை அன்று. அகப்புறம்.”(ப.570) என்றும் கூறப்படும் என்று யாப்பருங்கல விருத்தி பதிவு செய்துள்ளதைக் காணமுடிகிறது.*

*பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகள்*

*தொல்காபியம் “பொருளதிகார 266 ஆவது நூட்பா”(ப.64) பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகளைக் கூறுகிறது. அவை, இன்ப நலத்தினை வெறுத்தல், துன்பத்திடத்தே புலம்பல், உருவெளிப்பாடு கண்டு வருந்தல், குற்றம் ஆராய்தல், பசியால் வருந்தி நிற்றல், பசலை பரத்தல், உணவைக் குறைத்தல், உடல் இளைத்தல், உறங்காமை, கனவை நனவென மயங்குதல், தலைவன் கூற்றைப் பொய்யாகக் கொள்ளுதல், உரைத்த மாற்றத்தை மெய்யெனக் கூறல், தலைவன் குறிப்புக்கண்டு ஐயப்படல், தலைவன் உறவினரைக் கண்டதும் மகிழ்தல், அறத்தினை அழித்துக் கூறுமிடத்து நெஞ்சழிந்து கூறல், எவ்வுடம்பாயினும் தன்னோடு ஒப்புகை கொள்ளுதல், தன் மகனோடு ஒக்குமென்று பிறிதொன்றைக் கண்டவிடத்து மகிழ்தல், தன் மகன் பெயர் கேட்டு மகிழ்தல், மனங்கலங்குதல் என்ற பத்தொன்பதை பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகளாக கூறுகின்றது.*

*பெருந்திணைக்குரிய மணம்*

*மறையோர் தேயத்து மணமுறைகளில் காந்தருவம் தவிர்த்த பிற ஏழும் கைக்கிளை, பெருந்திணைப் பாற்பட்டவை எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. “பெருந்திணைக்குரிய மணநான்கு. அவை; பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம்”(ப.1087) என்று தமிழ் மொழி அகராதி கூறுகிறது.*

*“முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே” (தொல், கற்பியல், நூ. 102)*

*“பின்னர் நான்கும் பெருந்திணைப் பெறுமே” (தொல், கற்பியல், நூ.103)*

*இந்நூற்பாக்களுக்கு உரைகூறும் இளம்பூரணர், ‘எண் வகை மணத்தினுள்ளும் முன்னையவாகிய ஆசுரம் முதல் மூன்றும் (ஆசுரம், இராக்கதம், பைசாசம்) கைக்கிளைப் பாற்படும் என்றும், பிரமம் முதலிய நான்கும் (பிரமம், தெய்வம், ஆரிடம், பிரசாபத்தியம்) பெருந்திணைப் பாற்படும்' என்கிறார். இதனை நச்சினார்க்கினியரும் உறுதி செய்கிறார். ஒரு தலைக் காமத்தைக்*

கைக்கிளையாகவும் பொருந்தாக் காமத்தைப் பெருந்திணையாகவும் தமிழ் மரபு இலக்கணப்படுத்தியுள்ளது. காந்தருவம் ஒன்றே கைக்கிளை, பெருந்திணைப் பாற்படாத வடஇந்திய மணமுறையாகும். இம்மணமுறையில் தலைவனும் தலைவியும் ஒத்த மனத்தினராகக் கரணத்திற்கு முன் புணர்வர். இதனைத் தமிழ் மரபு களவிற் புணர்ச்சி எனக் கூறும். நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம், காதற் பரத்தையர் களவிற்குரியர் எனக் குறிப்பிடுகிறது. அதாவது வடமரபு கூறும் காந்தருவத்தை களவு எனக் கூறி அதனைப் பரத்தையருக்கே உரியதாக வரையறுத்துள்ளது.

## முடிவுரை

பெருந்திணை ஏழு அகத்திணைகளுள் ஒன்று என்றாலும் அது ஆண், பெண் இருபாலரித்திலும் ஒத்த அன்பு பெறாதது. பொருந்தாக் காம நிலைப்பாடுடையது. அகப்பெருந்திணை, புறப்பெருந்திணை, அகப்புறப்பெருந்திணை என்று இதனை இலக்கண ஆசிரியர்கள் வளர்த்தெடுத்துள்ளனர். அகப்பெருந்திணையும், அகப்புறப்பெருந்திணையும் அகஇலக்கண மரபில் வளர்த்தெடுக்கப்பெற்றுள்ளன. புறப்பெருந்திணை புற இலக்கண நூல்களில் வளர்த்தெடுக்கப்பெற்றுள்ளது. புறப்பெருந்திணை இருபாலினற்கும் பொதுவான கூற்று முறைகளைத் தெரிவித்து பெண்பால் கூற்றிற்கு பத்தொன்பது இடங்களைத் தந்துள்ளது. ஆண்பாற் கூற்றுப் பெருந்திணைக்குத் தனித்த துறைகள் வகுக்கப்படவில்லை. அகப்பொருள் இலக்கண மரபில் கைக்கிளையும், பெருந்திணையும் பின்வந்த பிற இலக்கண ஆசிரியர்களால் விரித்தும் பகுத்தும் உரைக்கப்பெற்றுள்ளன. இது கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றில் உள்ள நெகிழ் தன்மையைக் காட்டுகின்றது. மற்ற அகன் ஐந்திணைகள் மிகக் கட்டமைப்புடன் விளங்கியுள்ளன என்பதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

சங்க அக இலக்கியங்களில் கலித்தொகையில் மட்டுமே பெருந் திணையைச் சார்ந்த பதினான்கு பாடல்கள் உள்ளன. பிற அக இலக்கியங்களில் பெருந்திணையைக் காண இயல வில்லை. ‘பொருந்தாக்காமம்’ என்று உழைக்கும் மக்களின் காதலைப் பாடாமல் ஒதுக்கிய புலவர்கள், அரசர்கள் ஆண்டைகள் மற்றும் செல்வர்களின் பரத்தைமை ஒழுக்கத்தைப் பாராட்டியும் புகழ்ந்தும் ஏராளமான பாடல்களைப் பாடியுள்ளனர். சங்க இலக்கியங்களில் மருதத்திணை பற்றிய பாடல்கள் அனைத்தும் சுரண்டும் வர்க்கமாகிய மேல் தட்டு மாந்தரின் காமக்களியாட்டங்களைச் சிறிதும் கூச்சமின்றிப் புகழ்ந்தும், வியந்தும் பாடிய பாடல்களின் தொகுப்பேயாகும் எனல் மிகையன்று. ஒரு தலைக் காமம் என்றும் பொருந்தாக் காமம் என்றும் கூறி உழைக்கும் மக்களின் காதலைப் பாடாமல் புறந்தள்ளிய இந்நிலை வர்க்க ஒடுக்கு முறையின் அப்பட்டமான வெளிப்பாடேயாகும் எனல் தவறாகாது.

## துணைநூற் பட்டியல்


இராசேந்திரன்(உரை), முனைவர் இரா., புறப்பொருள் வெண்பாமாலை, ஸ்ரீநந்தினி பதிப்பகம், சென்னை, 2020.

இளங்குமரன்(ப. ஆ), புலவர் இரா., யாப்பருங்கல விருத்தி, கழக வெளியீடு, சென்னை, 1976.

இளம்பூரணனார்(உரை), தொல்காப்பியம்- பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், 2005.

கதிரைவேற் பிள்ளை, நா., தமிழ்மொழி அகராதி, சாரதா பதிப்பகம், சென்னை, 2003.

கந்தையா, ந. சி., செந்தமிழ் அகராதி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2019.

சுப்பிரமணியன், ச. வே., சங்க இலக்கியம்- எட்டுத்தொகை- தொகுதி 3, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010.

செல்வராசு, சிலம்பு நா., தொல்காப்பியத்தில் மணமுறைகள், காவ்யா, சென்னை, 2010.

ஞானசந்திர ஜான்சன்(உரை), முனைவர் யோ., அகப்பொருள் விளக்கம், பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 2010.

புலியூர் கேசிகன்(தெளிவுரை), தொல்காப்பியம், பாரி நிலையம், சென்னை, 2009.

மாணிக்கனார்(உரை), அ., கலித்தொகை- முதல் பாகம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1999.

மாணிக்கனார், வ. சுப., தமிழ்க்காதல், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2009.


********* ********* ********** ********* ********* ********** ********** **********